CAREERINDIA

+2

No. of Printed Pages : 7

613376

8161

பதிவு எண் | J | U | N | E | - | 1 | 8 |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின் மிகாது** விடை எழுதுக. 3x4=12

1. செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை ?

2. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

3. சாதிக்கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தைத் திரு.வி.க. வழிநின்று ஆய்க.

4. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

5. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை ?

[ திருப்புக

**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை எழுதுக. 3x4=12

6. தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

7. சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

8. தமிழர்கள் பழங்காலந்தொட்டே பல கலைகளையும் பேணி வளர்த்துள்ளனர் என்பதனை விளக்குக.

9. 'விரவுப் பெயராக இலக்கணத்தில் சொல்லப்படுவன மாடுகளின் பெரும்பயன் கருதியே' என்ற பாவாணர் கூற்றினை விளக்குக.

10. 'இரந்தும் உயிர்வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

**III.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது** விடை எழுதுக. 1x6=6

11. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

**IV.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்** விடை எழுதுக. 2x10=20

13. 'ஓர் உல்லாசப் பயணம்' அல்லது 'மண்' என்ற கதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**அல்லது**

'ஒவ்வொரு கல்லாய்' அல்லது 'பழிக்குப் பழி' என்னும் கதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

**14.** மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து (அல்லது) மகன் என்னும் கதையில் நும் மனம் கவர்ந்த கதை மாந்தர் குறித்த திறனாய்வு செய்க.

**அல்லது**

பால்வண்ணம் பிள்ளை பிடிவாத குணத்தை விட்டுச் சிறந்த குடும்பத்தலைவராக மாறியதாக நும் கற்பனைத் திறத்தால் ஒரு கதை எழுதுக.

**அல்லது**

கோமதி வேறுபாடு கருதாமல் மருமகளிடம் அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாகக் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக.

**V. 15.** பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
    பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பல தொழிலும் பெருக வேண்டும்
    சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்
    தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
    வெற்றியின் மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** To err is human, to forgive is divine.

**17.** Indian people always dislike violence.

**18.** Face is the index of the mind.

**19.** Too much of anything is good for nothing.

**20.** Think before you speak.

**21.** Little drops of water make the mighty ocean.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் (**பத்து வரிகளில்**) எழுதுக. **1x4=4**

(அ) குறைகுடம் கூத்தாடும்.

(ஆ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

(இ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

**அல்லது**

'அலைகடல்' அல்லது 'அருவி' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றைப் பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **VI** மற்றும் **VII** -ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உகந்த விடையை எழுதுக. வினா எண் **16** முதல் **22** வரை உள்ளவற்றில் **எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** ஏற்ற விடையை எழுதுக. **5x2=10**

பொய், சூது, வஞ்சனை போன்ற தீய எண்ணங்கள் இன்று மனித இனத்தை ஆட்டிப் படைக்கின்றன. இனிமை, எளிமை, வாய்மை, நேர்மை முதலிய பண்புகள் மதிப்பற்றுப் போய் விட்டன. காவலுக்குக் கூட விலங்கினத்தை நம்பும் இழிநிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனின் ஒழுங்கான நடத்தையின் வாயிலாகத்தான் சமுதாயத்தில் நல்ல மாற்றம் ஏற்படக் கூடும்.

உலகிலேயே மிகுந்த ஆற்றலுடையது அன்பே. வேறு எவர் மீதும் ஆணை செலுத்துவதற்கு அன்பைத் தவிர தம்மிடம் வேறு ஆயுதம் எதுவும் தேவையில்லை. அன்பு உரிமை வேண்டாது. மாறாக துன்பத்தையும் ஏற்றுக் கொள்ளும். பழி வாங்காது. ஆத்திரப்படாது என்கிறார் காந்தியடிகள். நமக்கு இன்பம், பிறருக்குத் துன்பம் என எண்ணும் குணம், அன்பை அழித்து, அறத்தைக் குலைத்து, ஆக்கத்தைக் கெடுத்து விடும். ஆதிக்கம் செலுத்த நினைக்கும் தீய எண்ணம், நம்மை இரண்டாந்தர மனிதனாக மாற்றி விடும்.

**வினாக்கள் :**

**16.** மனித இனத்தை ஆட்டிப் படைப்பவை எவை ?

**17.** மனித இனம் காவலுக்கு எதை நம்புகின்றது ?

**18.** உலகில் மிகுந்த ஆற்றலுடையது எது ?

**19.** துன்பத்தையும் ஏற்றுக் கொள்வது எது ?

[ திருப்புக

20. அன்பு பழி வாங்காது, ஆத்திரப்படாது எனக் கூறியவர் யார் ?

21. எப்பண்புகள் மதிப்பற்றுப் போய் விட்டன ?

22. எதன் வாயிலாகச் சமுதாயத்தில் நல்ல மாற்றம் ஏற்படக் கூடும் ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
(வாக்கியப் பிழையைத் திருத்துக)

24. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.
(மரபு வழுக்களை நீக்கி எழுதுக)

26. நஞ்சையும் புஞ்சையும் காஞ்சிப் போயின.
(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)

27. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.
(ஆங்கில சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

28. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.
(வடசொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

29. விலக்கு நன்றாக எரிந்தது.

(எழுத்து பிழைகளை திருத்தி எழுதுக)

30. விடிக்காலை வேளை சுடுச்சோறு ஆக்கிப் பரிமாறக் கூடுமா ?

(வலிமிகா இடங்களில் உள்ள வல்லெழுத்துக்களை நீக்கி எழுதுக)

31. அரை - அறை அல்லது ஆனி - ஆணி - பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

32. இத்துனை நயம்பட வயிற்றுப் பெருமான் பொருட்டு என்ற தொடரால் எவ்வளவு அரிய பெரிய நீதிகளை அறநெறிச் சாரம் செய்யுள் காட்டுகிறது.

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)

-oOo-